**<u>சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03 ஆம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056– விசுவாவசு வருடம் – கார்த்திகை திங்கள் 17 ம் நாள்)

**<u>இடைக்கால. மனு. எண். 03/2025</u>**
**in**
**<u>அசல் வழக்கு எண். 260/2022</u>**

1. திம்மம்மா
2. நஞ்சம்மா (எ) பெத்த நஞ்சம்மா
3. நஞ்சம்மா (எ) சிக்க நஞ்சம்மா
4. சின்னம்மா
5. மாரம்மா
6. சந்திரம்மா
7. முனிரத்னம்மா
8. மாரே கவுடா

.... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிராக/

1. திம்மராயப்பா
2. ராஜப்பா
3. ரத்தினம்மா
4. கெஞ்சம்மா
5. முனிரத்னம்மா
6. யசோதம்மா
7. பாக்கியம்மா
8. காந்தம்மா
9. நாராயணப்பா
10. கிருஷ்ணப்பா
11. மாரே கவுடா
12. ரமேஷ்
13. கிருஷ்ணப்பா

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

**இ.ம.எண்**. 03/2025 **நாள்** 03.12.2025

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 12.11.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. P. சந்திரா B.A., LLB., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருமதி. S. சரிதா, B.Com., MA., LLB., அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 13 எதிர்மனுதாரர்கள் / 6 முதல் 13 பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாதரப்பினர்களாக இருப்பதால் இம்மனுவிலும் அவர்களை தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனுகோப்பை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

அசல் வழக்குரையை திருத்தம் செய்வதற்க்காக மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில், உவிமுச கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

<u>2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம் :</u>

மனுதாரர் இம்மனுவில் 3வது மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 3வது வாதி என்றும், மனுதாரர் இந்த மனுவினை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்திருப்பதாகவும், மனுதாரர்கள் அசல் வழக்கினை பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், தற்பொழுது தான் இந்த மனுதாரர்கள் / வாதிகளுக்கு 20.01.1982 தேதியிட்ட மோசடியான உயிலை பற்றி தெரிய வந்தது என்றும், அந்த உயிலானது 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள விவரம் தற்போது தான் தெரியவந்தது என்றும், மேலும் வில்லங்க சான்றிதழிலும் 1982 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் வரவில்லை என்றும், அந்த உயில் மோசடியானது என்றும், அந்த உயில் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், அதனால் அந்த உயிலை பொறுத்து செல்லாதது மற்றும் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்பதற்காக அசல்

வழக்குரை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

<u>3. 1 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

மனுதாரர்களின் மனுவானது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிர்உரையில் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், 20.01.1982 தேதியிட்ட உயில் சாசனம் மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்ததாக கூறி இருப்பது தவறானது என்றும், அந்த உயில் மோசடியானது என்று கூறியிருப்பது தவறானது என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களில் பல வருடங்களாக சுவாதினத்தில் இருந்து வருவதாகவும், 05.10.2023 அன்று இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படும் போது அந்த உயிலை பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே அந்த உயிலை பற்றி மனுதாரர்கள் / வாதிகளுக்கு தெரிந்த நிலையில் தற்போது இந்த எதிர்மனுதாரர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றும், இந்த மனுவிற்கு எவ்வித நல்லெண்ணமும் இல்லை என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறி எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்று பார்க்கையில்,

5. அசல் வழக்கில் 9, 10வது பிரதிவாதிகளை பொறுத்து 02.07.2025 அன்று அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது. கவனக்குறைவாக இம்மனுவில் 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு எதிர்உரை என்று மேற்குறிப்பு செய்திருக்கிறார்கள். அசல் வழக்கில் 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளதால், இம்மனுவிலும் ஒருதலைப்பட்சமாக கருதப்பட்டுள்ளனர். இருதரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

6. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் / வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கினை பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்து வாதிகள் தரப்பு பிற வாய்மொழி சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்கள் தரப்பில், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், 1 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் அவர்களுக்கு 20.01.1982–ம் தேதியிட்ட உயில் படி தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியம் என்று எதிர்வழக்குரையில் கூறியிருக்கிறார்கள் என்றும், தற்பொழுது தான் அந்த விவரம் இந்த மனுதாரர்கள் / வாதிகளுக்கு தெரிய வந்தது என்றும், அந்த உயில் சாசனம் தாவா சொத்தை பொறுத்து இருப்பதால் அந்த உயில் சாசனம் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்றும், அவ்வாறு கேட்பதற்கு தகுந்தவாறு அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்திருப்பதாகவும், மனுதாரர்களுக்கு அந்த உயிலின் நகல் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், அந்த உயில் நகல் கிடைத்த பிறகுதான் மனுதாரர்கள் தரப்பில் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அந்த உயிலை பற்றி எதிர் வழக்குரையில் கூறியிருந்தாலும் அந்த உயில் ஆனது வில்லங்க சான்றிதழில் வராததாலும் அந்த உயிலின் நகல் தற்போது தான் இந்த மனுதாரர்களுக்கு கிடைத்திருப்பதால் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்திருப்பதாகவும், அதனால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டிருக்கிறது.

7. இதற்கு 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் 05.10.2023 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படும் போது 20.01.1982 தேதியிட்ட உயிலைப் பற்றி தெளிவாக கூறப்பட்டிருக்கிறது என்றும், அந்த உயிலை பற்றியும் வா.சா.1 டம் இந்த 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், 20.01.1982 தேதியிட்ட உயிலின் நகல் இந்த எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையிலும் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், ஆக இந்த மனுதாரர்கள் / வாதிகளுக்கு 20.01.1982 தேதியிட்ட உயிலைப்

பற்றி நன்கு தெரிந்திருந்த நிலையில் காலதாமதமாக இந்த திருத்தல் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றும், இந்த திருத்தல் மனுவிற்கு எவ்வித நல்லெண்ணமும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதிடப்பட்டிருக்கிறது.

8. மனு ஆவணங்களை பரீசிலனை செய்கையில், தற்பொழுது மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வா.சா.1 சாட்சியம் முடிக்கப்பட்டு வாதிகள் தரப்பு பிற வாய்மொழி சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் இந்த திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 05.10.2023–ம் தேதி 1 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் 20.01.1982 தேதியிட்ட உயிலைக் பொறுத்து கூறி இருப்பதால் இந்நீதிமன்றம் இவ்வழக்கில் எழுவினாக்கள் வனையப்படும் போது 20.01.1982 தேதியிட்ட உயிலை பொறுத்தும், அந்த உயில் முனியப்பாவால் எழுதி கொடுக்கப்பட்டதா ? அந்த உயில் செல்லத்தக்கதா ? என்பதை பொறுத்தும் எழுவினாக்கள் ஏற்கனவே வனையப்பட்டு உள்ளது. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் 05.010.2023 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அதில் 20.01.1982 தேதியிட்ட உயிலைப் பற்றி கூறியிருக்கிறார்கள். காலவரையறை சட்டம் 1963 Art 56 ன் படி ஒரு ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று எப்பொழுது தெரிய வருகிறதோ அதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் அந்த ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் 05.10.2023 அன்று அவர்களுடைய எதிர்வழக்குரையில் 20.01.1982 உயிலை பற்றி கூறியிருக்கிறார்கள். ஆக, வாதிகளுக்கு 05.10.2023 ஆம் தேதியிலேயே 20.01.1982 தேதியிட்ட உயிலைப் பற்றி தெரிய வந்திருக்கும் நிலையில் அவர்கள் விளம்புகை பரிகாரத்தை 05.10.2026 ஆம் ஆண்டுக்குள் அந்த உயில் செல்லாது மற்றும் இல்லா நிலையது என அறிவிக்க கோரும் விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும். ஆக, மனுதாரர்கள் / வாதிகள் 05.10.2026 க்கு முன்பு உரிய காலவரையறைக்குள் 20.01.1982 தேதியிட்ட உயில் செல்லாதது என அறிவிக்க கூறும் விளம்புகை பரிகாரத்தை பொறுத்து அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என கேட்டு இருக்கிறார்கள். அந்த பரிகாரமானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை.

இந்த திருத்தம் ஆனது வழக்கு விசாரணை ஆரம்பித்த பிறகு செய்யப்படும் திருத்தம் என்பதால் அதனை புறம் தள்ளிவிட முடியாது. இந்த திருத்தல் மனுவானது அசல் வழக்கினை இறுதியாகவும் முழுமையாகவும் தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் 20.01.1982 தேதியிட்ட உயிலை பொறுத்து அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ள நிலையில் இந்த திருத்தல் மனு அனுமதிப்பதனால் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள் 20.01.1982 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் தான் அவர்கள் கட்சி செய்து வருகிறார்கள். அந்த உயிலை பொறுத்து ஏற்கனவே அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளதால் இந்த திருத்தல் மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமும் இல்லை என்பதாலும், மேற்படி திருத்தம் குறித்து மனுதாரர்கள் தங்களுக்கு தற்போது தான் தெரியவந்தது என கூறி இருக்கின்ற காரணத்தினாலும், ஏற்கனவே தங்களுக்கு அந்த உயிலை பற்றி தெரியாது என்று கூறியிருக்கின்ற காரணத்தினாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக, இம்மனு செலவு தொகை இல்லாமல் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2025–ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2025.12.03 16:30:10 +0530

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் சாட்சி, சான்றாவணபட்டியல் :** இல்லை.

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2025.12.03 16:30:15 +0530

**இ.ம.எண்.** 03/2025 **நாள்** 03.12.2025